## மாலிம்பட பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 17 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாலிம்பட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய மூலதன உதவி கடன்பட்டோர் ரூபா 151,356 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது கட்டிட நிர்மாண வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,629,470 தொகையினை மூலதனப்படுத்தி இருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப் படுத்த வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | ஹொரகொட பொது சந்தை கட்டிட மற்றும் காணியின் பெறுமதி ரூபா 1,000,000 தொகை மிகையாக மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி மானியத்தின் கீழ் பெற வேண்டிய ரூபா 350,418 தொகை நிர்மாணவேலை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 673,400 இற்கான மூலதன செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப பலவின கடன்கொடுத்தோர் ரூபா 13,792,305 இற்கான மீதியில், மூலதனக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ரூபா 11,587,834 தொகையை மாற்றும் போது பதிவு செய்யப்பட்டிருந்த 7 ஆம் இலக்க நாட்குறிப்பு பிழையாக பதிவு செய்து ரூபா 12,443,631 தொகை பலவினக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால், அந்த கணக்கு மீதி ரூபா 855,797 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மூலதனக் கடன்கொடுத்தோர் கணக்கின் இறுதி மீதி சரியாக உள்ளது. |
| (vii) | மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்ட ரூபா 765,002 தொகை பெறுமதியான நீர்க் குழாய் உபகரண இருப்பு ஒன்று கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஹொரகொட நீர்ச் செயற்திட்டம் மற்றும் புவக்தொல மற்றும் ஹொரகெடிய நீர்ச் செயற்திட்டத்தின் பெறுமதியுள் இந்த நீர் குழாய் உபகரணங்கள் இருப்புகளின் பெறுமதி யும் அடங்கியுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 93,681,908 தொகைக்கான 09 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 1,224,861 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 287,756,251 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 இற்கான நிதிக் கூற்றுக்களுடன் விரிவான அட்டவணைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 33 | வீதி வரி செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பான அட்டவணை ஒன்று மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் எழுத்தாணைக் கட்டணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 571 | ரூபா 1,114,874 தொகை பெறுமதியான காலங்கடந்த திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | 2020 ஆண்டில் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நி.பி. 1646 | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான எரிபொருள் மற்றும் பராமரிப்புக்காக ரூபா 1,745,520 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பிரமாணங் களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்ட ஓட்ட அட்டவணைகள் குறிப்பிட்டுள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,572,230 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,884,732 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,594,200 | 1,276,641 | 1,299,332 | 84,998 | 1,569,000 | 1,184,082 | 1,209,492 | 107,689 |
| வாடகை | 7,026,400 | 2,597,615 | 2,722,676 | 147,275 | 6,547,600 | 1,922,145 | 1,745,537 | 272,336 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 566,000 | 655,309 | 583,409 | 87,900 | 639,500 | 786,642 | 787,442 | 16,000 |
| ஏனைய வருமானங்கள் | 27,197,900 | 21,256,688 | 21,061,175 | 49,768,167 | 24,889,800 | 21,811,557 | 11,496,947 | 49,572,654 |
| மொத்தம் | 37,384,500 | 25,786,253 | 25,666,592 | 50,088,340 | 33,645,900 | 25,704,426 | 15,239,418 | 49,968,679 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை மீதி ரூபா 92,898 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 154,196 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 247,094 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 171,287 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 75,807 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி ரூபா 14,867 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,489 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 19,356 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 10,094 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9,262 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆரம்ப நிலுவையில் 50 சதவீதம் சிட்டை யிடல்களில் 60 சதவீதம் ஆண்டின் போது அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை ஏக்கர் வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 16,000 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 655,309 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 671,309 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 583,409 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் ரூபா 87,900 தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டது. | வியாபார வரி விரைவாக அறவிட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,106,257 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 48,200,867 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் பிரிவு 139 இன் பிரகாரம் ஆக்கப்பட வேண்டிய 30 துணை விதிகளில் 14 துணை விதிகள் மாத்திரம் ஆக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | துணை விதி (i) – (xix) வரை தழுவி உள்ளேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபி விருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவை செய்வ தற்கு சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னே ற்றத்தை அளவை செய்ய வேண்டும். | வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயற்படுத்துவேன். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2020 ஜனவரி 27 ஆந் திகதி பொதுக் களஞ்சியம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 4 விடயங்கள் தொடர்பான ரூபா 23,436 இற்கான பற்றாக்குறை ஒன்று மற்றும் 15 விடயங்கள் தொடர்பான ரூபா 40,411 இற்கான மிகை ஒன்று காணப்பட்டது. | களஞ்சியக் கட்டுப்பாடு உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மூன்றாம் நிலையில் மிகை பதவி 01 இற்கான அங்கீகாரம் பெறுவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிக பதவியணியின் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுகின்றேன். |

### 3.4 செற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொறுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 17 விளம்பரப் பலகைகளில் இருந்து 2017 முதல் 2019 வரை ரூபா 351,375 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு வாடகையாளர்களை அறிவித்துள்ளேன். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(2) இன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசமாக விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால், வீதவரி அறவிடப்பட வேண்டிய ஆதனங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்ய முடியாதிருந்தது. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி அதிகாரப் பிரதேச எல்லையை விரிவாக்குவது தொடர்பாக சபை இணங்கி இருக்காமையால் வீதவரி அதிகாரப் பிரதேச வரையறை விரிவாக்கவில்லை. |
| (இ) | 2019 ஆண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 43 நிறுவனங்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய சேதம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்காததுடன், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரக் கட்டணமாக ரூபா 189,200 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரை அறவிடப்பட வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபச 15 மற்றும் 2007 மார்ச் 19 ஆம் திகதிய அறிவுரைக் கடிதத்தின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ரூபா 727,688 தொகை பெறுமதியான 03 காணிகள் தொடர்பாக காணிகளை அளவை செய்து எல்லைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவுரைக் கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிதி நிலைமை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் காணிகளை அளவை செய்து எல்லைகளை அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### 3.5.2 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | துணைப் பகிர்வின் போது சமூக மற்றும் களியாட்ட அலுவல்களுக் காக சபைக்குக் கிடைத்திருந்த 2 ஏக்கர் 35.11 பர்சஸ் அளவான 10 காணித் துண்டுகளை பயன்படுத்தி இருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஒதுக்கப்பட்ட காணிகளில் இருந்து பொருத்தமான காணிகளை பயிர் செய்கைக்காக பயன்படுத்துவேன். |
| (ஆ) | 2020 ஜனவரி 28 ஆந் திகதி 03 வருடங்களை விட மிகையான காலப் பகுதியில் சபைக்குச் சொந்தமான ரூபா 7,967,400 தொகை பெறுமதியான கல்உருளை ஒன்று 2017 மார்ச் 12 முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்படு நிலைக்கு ஆக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்த வேலை மேற்கொண்டு ஓட்ட நிலைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புவக்தொல மற்றும் ஹொரகெடிய நீர்ச் செயற்திட்டங்களை செயற்படுத்து வதற்காக நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் இருந்து நீர் பெற்றுக் கொள்ள முடியாமையால் அதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 765,002 இற்கான நீர் துணைக் கருவிகள் 2020 ஜனவரி 27 திகதி அளவிலும் சபையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | செயற் திட்டத்தை விரைவாக செயற்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் நீர் வழங்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்படு வதுடன், 2020 ஆண்டின் போது மீதியான துணைக் கருவிகளை வழங்கி பொது மக்களுக்கு நீர் வழங்க இயலுமாக உள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப் பகுதியில் தென் மாகாண சபை மந்திரி ஏற்பாடுகளின் கீழ் 08 செயற்திட்டங்கள் செயற்படுத்து வதற்காக ரூபா 556,500 இற்கான தொகை ஒன்று கிடைத்திருந்த போதிலும், 2020 ஜனவரி 27 ஆந் திகதி அளவிலும் அச் செயற்திட்டங்கள் செயற்படுத்தி இருக்கவில்லை. | செயற்திட்டங் களை செயற்படுத்த வேண்டும். | ஒதுக்கியிருந்த பணம் போதாமை, செயற்திட்டப் பிரேரணைகள் அடிக்கடி திருத்தப்பட்டமை மற்றும் சபை கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களின் படி செயற்திட்டப் பிரேரணைகள் செயற்படுத்தப் படுகின்றது. |
| (இ) | மீளாய்வாண்டின் போது 05 செயற்திட்டங்களின் கீழ் 63 நிர்மாண வேலைகள் செயற்படுத்துவதற்காக பாதீட்டின் மூலம் ரூபா 11,610,000 இற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பாதீட்டின் மூலம் திட்டமிடப் பட்டுள்ள செயற்திட்டங் களை செயற்படுத்தல் வேண்டும். | அங்கத்துவ சபையினால் வேறு பிரேரணைகள் அங்கீகரிக்கப் பட்டமை, காலநிலை காரணமாக வேறு அவசர பிரேரணைகள் செயற்படுத்த நேரிட்டமை, பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சில வேலைத் திட்டங்கள் வேறு ஏற்பாடுகளின் மூலம் செயற்படுத்தப் பட்டமை மற்றும் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமை ஆகிய காரணங்களினால் செயற்படுத்த முடியாமல் இருந்தது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுப் பகுதிக்கு வேறு விடயங்கள் சாட்டப்பட்டிருந்தது. |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையினால் 2012 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 175,644 தொகை பெறுமதியான அச்சுக் கல் உற்பத்தி இயந்திரம் பழைய கிராம சபை கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தது. | ஆக்கபூர்வமான விடயங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |